[25th March 1959

Income derived from cultivation of tea, coffee and arecanut in the Nilgiris and Coimbatore districts

* 997 E. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்ளவிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நீலகிரி, கோவை ஜில்லாக்களில் தேயிலே, காப்பி, பாக்கு, முதலியவை களை சர்க்காருக்கு சொந்தமான நிலங்களில் பயிரிடுவதால் 1958-ல் சர்க் காருக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In the Nilgiris district, the income derived from the cultivation of tea was Rupees 619, from coffee Rs. 3 and from arecanut Rs. 882·90.

In the Coimbatore district, the income derived from the cultivation of tea was Rs. 2,310·75 and from arecanut Rs. 2,164·30. No income was derived from coffee in this district.

SRI V. K. KOTHANDARAMAN : அங்கே சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களை வெள்ளேயர் ஆட்சிக் காலத்தில் 90 வருஷத்திற்கென ஏக்கர் ஒன்றுக்கு 8 அணு வீதம் அக்ரிமெண்ட் செய்து கொண்டனர். அந்த அக்ரிமெண்ட் இந்த வருஷத்துடன் முடிவடைகிறது. அதற்குப் பிறகு நமது சர்க்காரே அவைகளை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

Action against hoarders and black marketeers in foodgrains

* 997-F *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI A. A. Rasheed) : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to take punitive action against the hoarders and black marketeers of foodgrains in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI S. M. ANNAMALAI : இப்போது சென்னே நகரில் கூட அரிசிப் பற்றுக்குறை இருப்பதால் தஞ்சாவூரிலிருந்து இங்கு அரிசி வரவழைக்கப் படும் என்று சர்க்காரின் அறிக்கையில் கண்டிருந்தது. நெல்லூரிலிருந் தும் நெல் வரவில்லே. அந்தக் காரணத்தால் இங்கே மேலும் மேலும் அரிசிப்பற்றுக்குறை இருப்பதால் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆந்திராவிலுள்ள அரிசியை மத்திய சர்க்காரின் மூலம் கேட்டு வாங்கவும் நமது சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பற்றுக்குறை இருக்கிறதா இல்லேயா என்று தீர்மானிப்பதை, உற்பத்தியைக் கணக்கிட்டுத் தீர்மானிப்ப தாயிருந்தால் சென்னே ராஜ்யத்தில் அரிசிப் பற்றுக்குறை இல்லே என்று தான் சொல்லவேண்டும். அரிசியை வெளியிலிருந்து வாங்கித்தான் கொடுக்கவேண்டும். அரிசி நெல்லூரிலிருந்து மட்டுமன்றி தஞ்சாவூர் ஜில் லாக்களிலிருந்தும் இங்கு வரவேண்டியிருக்கிறது. நெல்லூரில் அரிசி அதிக விலேயாக இருப்பதால், அதை எப்படி மத்திய அரசாங்கத்தின் மூலம் கேட்டு வாங்குவது என்று தெரியவில்லே. நான் முன்பு சொன்னதுபோல மண்டல ஏற்பாடு இப்போது சரியாக நடக்கவில்லே. அதை மாற்றியமைக்க இப்போது ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேம். தஞ்சாவூரிலிருந்து வரும் அரிசியை வியாபாரிகள் விற்காமல் பதுக்கி வைத்திருப்பார்களானுல் அவர் கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனுல் விபாபாரிகளிடம் போதிய அளவு அரிசி இல்லே என்பதுதான் இப்போதைய பிரச்னே. அரிசியை தஞ்சாவூரிலிருந்து வாங்கி வியாபாரிகளுக்குக் கொடுக்கவும், டி. யு. ஸி. எஸ். போன்ற ஸ்தாபனங்களுக்கு அந்த அந்த இடங்களிலிருந்து ரிக்வி ஸிஷன் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி காரியங்கள் செய்யப்படுகின்றன.